ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 15) Feb 2008



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

# உட்பொதிவு


1. ஸ்ரீரங்கராஜஸ்தவம் (உத்தர பாகம்)
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. திருமாலை
7. திருக்கச்சி நம்பிகள்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

## ஸ்ரீரங்கராஜஸ்தவம் – உத்தர பாகம்

(பகுதி – 2)

11. ஏதத் ராமாஸ்த்ரம் தளயது கலிப்ரஹ்ம மீமாம்ஸகாந் ச
ஜ்ஞப்தி: ப்ரஹ்ம ஏதத் ஜ்வலத் அபி நிஜ அவித்யயா பம்ப்ரமீதி
தஸ்ய ப்ராந்திம் தாம் ச்லதயதி ஜித அத்வைத வித்ய: து ஜீவ:
யத் யத் த்ருச்யம் விததம் இதி யே ஜ்ஞாபயாஞ்சக்ரு: அஜ்ஞா:

பொருள் – (அத்வைத வாதங்களைக் கண்டிகிறார்) குணங்கள் அற்ற, ஞானமயமானது ப்ரஹ்மம் (நிர்விசேஷ சிந்மாத்ரம் ப்ரஹ்ம); ப்ரஹ்மம் தானே வெளிப்படும் தன்மை கொண்டுள்ளபோதிலும், தன்னுடைய அவித்யை காரணமாக மறைந்து நிற்கிறது; ஜீவாத்மா செய்வது என்னவெனில் – "தத் த்வம் அஸி, அஹம் ப்ரஹ்ம" முதலான வாக்யங்களின் உதவி கொண்டு, ஞானம் பெற்று, ப்ரஹ்மத்தின் அவித்யையை விலக்குகிறான்; கண்ணில் நாம் காணக்கூடிய அனைத்தும் பொய்யானது – இப்படியாகப் பல தவறான கருத்துக்களை அஜ்ஞானிகள் பலர் வெளிப்படுத்தினர். கலிபுருஷனே வடிவம் எடுத்து வந்தது போன்ற மஹாபாபிகளான இவர்கள், இவ்விதம் தவறாக ப்ரஹ்ம விசாரணை செய்தனர். இதுவரை மேலே கூறப்பட்ட ச்லோகங்களானவை, விரோதிகளை குறி தவறாமல் வீழ்த்தும் இராமபாணம் போன்று, இவர்களின் வாதங்களைக் கண்டித்துவிடும்.

விளக்கம் – அத்வைதிகளின் கருத்துப்படி, ப்ரஹ்மம் என்பது அவித்யையால் மூடப்பட்டு, ஜீவனாகத் தன்னை நினைத்தபடி உள்ளது. இந்த அவித்யை என்னும் அறியாமை விலகும்போது, மேகம் நீங்கு சூரியன் புலப்படுவதுபோல், ப்ரஹ்ம்ம் தன்னை உணர்ந்து கொள்கிறது. ஆக, அனைத்து ஜீவன்களும் ப்ரஹ்மமே, தான் ப்ரஹ்மம் என்று உணர்ந்தவுடன் ஜீவன் என்பது ப்ரஹ்மமாகி விடுகிறது.

இப்படிப்பட்ட ப்ரஹ்மம் எந்தவிதமான குணங்களும் அற்றது. இந்த வாதங்களைத் தகர்க்கிறார்.

12. அங்கீக்ருத்ய து ஸப்த பங்கி குஸ்ருதிம் ஸ்யாத் அஸ்தி நாஸ்தி ஆத்மிகாம்
விச்வம் த்வத் விபவம் ஜகத் ஜிநமதே நைகாந்தம் ஆசக்ஷதே
பிந்நாபிந்நம் இதம் ததா ஜகதுஷே வந்த்யா மம அம்பா இதிவத்
நூத்ந ப்ரஹ்மவிதே ரஹ: பரம் இதம் ரங்கேந்த்ர தே சக்ஷதாம்

பொருள் – (ஜைனர்களின் வாதங்களைத் தள்ளுகிறார்) ஸ்ரீரங்கநாதா! இருக்கும், இல்லாமல் இருக்கும், இருக்கவும் இருக்கும் இல்லாமலும் இருக்கும் என்பது போன்ற ஏழு விதமான வாதங்களை முன்னே வைத்து ஜைனர்கள் செய்வது என்ன – உன்னுடைய விபூதியாக உள்ள அனைத்து உலகங்களையும் தங்கள் தவறான வாதங்களுக்கு இலக்காக்கி விடுகின்றனர். மேலும் சிலர் இந்த உலகங்களை ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்றும், இந்த உண்மை புரிந்துவிட்டால் ப்ரஹ்மத்திற்கும் உலகத்திற்கும் வேறுபாடு இல்லை என்றும் ஏதேதோ கூறுகின்றனர். இவர்களின் சொற்கள் எப்படி உள்ளது என்றால் – எனது தாய் மலடி – என்று அவர்களே கூறுவது போன்று உள்ளது. இப்படிப்பட்டவர்களுக்கு ஜைனர்கள் தங்களது மிகவும் உயர்ந்த ரஹஸ்ய உபதேசங்களைச் செய்யட்டும் (நமக்கு அவசியம் இல்லை).

13. கணசர சரணாக்ஷௌ பிக்ஷமாணௌ குதர்க்கை:
ச்ருதிசிரஸி ஸுபிக்ஷம் த்வத் ஜகத் காரணத்வம்
அணுஷு விபரிணாம்ய வ்யோமபூர்வம்ச கார்யம்
தவ பவத் அநபேக்ஷம் ரங்கபர்த்த: ப்ருவாதே

பொருள் – (நையாயிகர், வைசேஷிகர் ஆகியோரின் வாதங்களைக் கண்டிக்கிறார்) திருவரங்கனே! வேதங்களின் தலைப்பகுதி என்று கூறப்படும் வேதாந்தங்கள் உன்னையே அனைத்தின் காரணமாக்க் கூறுகின்றன. இப்படி உள்ளபோது கணாதரும், கௌதமரும் செய்வது என்ன? தவறான வாதங்களைப் பிச்சையாகப் பெற்று நின்றனர். அனைத்திற்கும் பரமாணுக்களே காரணம் என்றும், உன்னுடைய செயல்பாடான அனைத்தையும் உன்னுடைய தொடர்பு அற்றவை என்றும் கூறுகின்றனர்.

விளக்கம் – கணாதர் ஏற்படுத்தியது வைசேஷிக மதம், கௌதமர் ஏற்படுத்தியது ந்யாய மதம் ஆகும். இவர்களின் மதத்தின்படி, ஈச்வரன் ஜகத்தின் உபாதானக் காரணம் அல்ல, அனைத்தும் பரமாணுக்களே என்பதாகும். உபாதானக் காரணம்

என்றால் என்ன? ஒரு பொருளுக்கு – நிமித்த காரணம், உபாதானக் காரணம் மற்றும் ஸஹகாரி காரணம் என்னும் மூன்று உண்டு. நிமித்த காரணம் என்றால், அந்தப் பொருளை மாறுபாடு அடையும்படிச் செய்யும் வஸ்துவாகும். உபாதானக் காரணம் என்றால், அந்த மாறுபாட்டிற்கு உபயோகப்படும் மூல வஸ்துவாகும். ஸஹகாரி காரணம் என்றால், அந்த மாறுபாட்டிற்குத் துணை நிற்கும் வஸ்துவாகும். உதாரணமாக பானையை எடுத்துக் கொண்டால் – நிமித்த காரணம் = குயவன், உபாதானக் காரணம் = மண், ஸஹகாரி காரணம் = பானை சுழற்றும் சக்கரம். இவர்களின் வாதத்தின்படி ஈச்வரன் நிமித்த காரணமோ, உபாதானக் காரணமோ அல்ல என்பதாகும். இது வேத வாக்யங்களுக்கு முரணானது ஆகும். பிக்ஷமாணௌ என்றால், மிகுந்த ஐச்வர்யம் உள்ளபோதிலும், பிச்சை எடுத்தல் என்பதாகும் – இதன் கருத்து, உயர்ந்த கருத்துக்களை உபனிஷத்துக்கள் முழங்கியபடி இருக்க, தவறான வாதங்களின் பின்னே செல்வது என்பதாகும்.

14. வேதே கர்த்ரு ஆதி அபவாத் பலவதி ஹி நயை: தவத் முகே நீயமாநே
தத் மூலத்வேந மாநம் ததிதாத் அகிலம் ஜாயதே ரங்கதாமந்
தஸ்மாத் ஸாங்க்யம் ஸயோகம் ஸபசுபதிமதம் குத்ரசித் பஞ்சராத்ரம்
ஸர்வத்ர ஏவ ப்ரமாணம் தத் இதம் அவகதம் பஞ்சமாத் ஏவ வேதாத்

பொருள் – திருவரங்கத்தில் கண்வளர்பவனே! யாராலும் இயற்றப்படாதது என்பதால் எந்தவிதமான தோஷங்களும் அற்றதான வேதங்கள், பலவிதமான ந்யாயங்களால் (ஸர்வ வேதாந்த ப்ரத்யயந்யாயம், ஸர்வசாகா ப்ரத்யயந்யாயம்) உன்னையே பரமாகக் கொண்டுள்ளன. இப்படிப்பட்ட வேதங்கள் தவிர உள்ள பல நூல்களும் ப்ரமாணங்கள் என்று ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆயினும், அவை வேதங்களில் உள்ள பகுதிகளைத் தங்களுக்குள் கொண்டு, வேதங்களுக்கு முரண்பாடு இல்லாமல் கூறும் என்றால், அவையும் உனது விஷயத்தில் ப்ரமாணங்கள் ஆகின்றன. இந்தக் காரணத்தினால் – யோகசாஸ்த்ரம் மற்றும் பாசுபத மதத்துடன் கூடியுள்ள ஸாங்க்ய மதமானது, உன் விஷயத்தில் ஓரளவு ப்ரமாணமாக உள்ளது. ஆனால் பாஞ்சராத்ரம் உனது விஷயத்தில் முழுப் ப்ரமாணமாகவே உள்ளது. இந்த விஷயமானது ஐந்தாம் வேதம் என்று போற்றப்படும் மஹாபாரதத்தின் மூலம் அறியலாம்.

15. ஸஞ்சஷ்டே ந ஈச்வரம் த்வாம் புருஷ பரிஷதி ந்யஸ்ய யத்வா ஆந்யபர்யாத்
ஸாங்க்ய: யோகீ ச காக்வா ப்ரதிபலநம் இவ ஐச்வர்யம் ஊசே கயாசித்
பிக்ஷௌ சைவ: ஸ்வராஜம்பவம் அபிமநுதே ரங்கராஜ அதிராகாத்
த்வாம் த்வாம் ஏவ அப்யதா: த்வம் நநு பர விபவ வ்யூஹந ஆட்யம் பவிஷ்ணும்

பொருள் – ஸ்ரீரங்கநாதா! ஸாங்க்யர்கள் உன்னை சேதநன் என்று கொள்கின்றனர். ஆகையாலே உன்னை இச்ச்வரன் என்று ஒப்புக் கொள்ளவில்லை. பதஞ்ஜலியும் யோகம் என்னும் கருத்தால் உனது ஐச்வர்யத்தை ஒப்புக் கொள்ளாமல் இருந்தான். சைவர்கள் பிக்ஷை எடுப்பவனான ருத்ரன் மீது உள்ள அன்பு காரணமாக, உன்னை ஈச்வரன் என்று ஏற்காமல்,ருத்ரனை இவ்விதம் கூறியபடி உள்ளனர். இப்படி உள்ளபோது நீ செய்த்து என்ன? பரவாஸுதேவனாகவும், ஸங்கர்ஷணன் முதலான வ்யூஹங்களாகவும், இராமன் – க்ருஷ்ணன் முதலான விபவங்களாகவும் உனது ஸ்வரூபத்தை விளக்கி, நீயே ஈச்வரன் என்று விளக்கினாய் அல்லவா?

16. இதி மோஹந வர்த்மநா த்வயா அபி க்ரதிதம் பாஹ்யமதம் த்ருணாய மந்யே
அத வைதிகவர்ம வர்மிதாநாம் மநிதாஹே குத்ருசாம் கிம் ஈச வர்த்ம

பொருள் – ஸ்ரீரங்கநாதா! மற்றவர்களை மயக்கும் விதமாக இப்படிப்பட்ட பலவிதமான மதங்களை நீயே உண்டாக்கினாய். இவ்விதம் இவை உனது படைப்பாகவே இருந்தாலும், இந்த வேதபாஹ்ய மதங்களை நான் துச்சமாகவே எண்ணுகிறேன். மேலும் தாங்கள் வைதிகர்கள் என்னும் வெளிவேடம் பூண்டபடி உள்ள குத்ருஷ்டிகளின் (குத்ருஷ்டிகள் = அத்வைதிகள் முதலானோர்) உபதேசங்களை எனது உள்ளத்தால் கூட நான் நினைப்பேனோ?

17. ஸம்ஸ்காரம் ப்ரதிஸஞ்சரேஷு நிததத் ஸர்க்கேஷு தத்ஸ்மாரிதம்
ரூபம் நாம ச தத்தத் அர்ஹ நிவஹே வ்யாக்ருத்ய ரங்காஸ்பத
ஸுப்த உத்புத்த விரிஞ்ச பூர்வ ஜகதாம் அத்யாப்ய தத்தத் ஹிதம்
சாஸத் நஸ்ம்ருத கர்த்ருகாந் வஹஸி யத் வேதா: ப்ரமாணம் தத:

பொருள் – (இந்தச் ச்லோகத்தின் மூலம் வேதங்களே அனைத்திற்கும் ப்ரமாணம் என்று கூறுகிறார்). ஸ்ரீரங்கநாதா! ப்ரளய காலத்தின்போது அனைத்து வேதங்களையும் நீ உன் பக்கம் பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறாய். ஸ்ருஷ்டி காலம் வந்தவுடன், பலவிதமான வஸ்துக்களுக்கு அவற்றின் பெயர், ரூபம் ஆகியவற்றை நினைவில் கொண்டுவந்து ஸ்ருஷ்டிக்கிறாய். இப்படியாக அந்தந்த வஸ்துவை இந்த உலகில் ஏற்படுத்துகிறாய். உறங்கியபடி உள்ள ப்ரம்மன் போன்ற ஜீவன்களை எழுப்பி, இவற்றை அவர்களுக்கு உபதேசிக்கிறாய். அவரவர்களுக்கு

நன்மை எது என்று ஆராய்ந்து நீ நியமிக்கிறாய். இப்படியாக "யார் இவற்றை உண்டாக்கியது" என்று தெரியாமல் உள்ள வேதங்களை நீ நிர்வாஹம் செய்தபடி உள்ளாய். இப்படியாக அந்த வேதங்கள் உயர்ந்த ப்ரமாணங்கள் ஆகின்றன.

18. சீக்ஷாயாம் வர்ணசிக்ஷா பதஸமதிகம: வ்யாக்ரியா நிர்வசோப்யாம்
சந்த: சந்தஸ்திதௌ ஸ்யாத் கமயதி ஸமயம் ஜ்யௌதிஷம் ரங்கநாத
கல்பே அனுஷ்டாநம் உக்தம் ஹி உசிதகமிதயோ: ந்யாய மீமாம்ஸயோ: ஸ்யாத்
அர்த்த வ்யக்தி: புராண ஸ்ம்ருதிஷு தத் அனுகா: த்வாம் விசிந்வந்தி வேதா:

பொருள் – ஸ்ரீரங்கநாதா! வேதங்களின் ஆறு அங்கங்களாக – சீக்ஷா, வ்யாகரணம், நிருக்தம், சந்தோவிசிதி, கல்பஸூத்ரம் மற்றும் ஜ்யோதிஷம் உள்ளன. இவற்றில் சீக்ஷை என்பது அக்ஷரங்களின் உச்சரிப்பு முதலானவற்றைக் கூறுகிறது. வ்யாகரணம் மூலம் பதங்களின் இலக்கணமும், நிருக்தி மூலமாக அந்தப் பதங்களின் அர்த்தப் ப்ரயோகங்களும் விளக்கப்படுகின்றன. சந்த சாஸ்த்ரம் மூலமாக – காயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப், த்ரிஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தி மற்றும் ஜகதீ என்னும் ஏழு சந்தஸ்ஸுகள் விளக்கப்படுகின்றன. ஜ்யோதிஷம் மூலம் அனுஷ்டான காலங்கள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. கல்பஸூத்ரம் மூலம் அனுஷ்டான விதிமுறைகள் கூறப்பட்டன. வைதிக மார்க்கத்திற்கு உபாயமாக உள்ள ந்யாயம், மீமாம்ஸை, புராணங்கள், ஸ்ம்ருதிகள் முதலானவை மூலம் வேதங்களின் ஆழ்பொருள் புலப்படும். இப்படியாக மேலே கூறப்பட்ட பலவற்றாலும் சூழப்பட்டு நிற்கும் வேதங்கள் உன்னை எப்போதும் தேடியபடியே உள்ளன.

19. ஆதௌ வேதா: ப்ரமாணம் ஸ்ம்ருதி: உபகுருதே ஸ இதிஹாஸை: புராணை:
ந்யாயை: ஸார்த்தம் த்வத் அர்ச்சா விதிம் உபரி பரிக்ஷீயதே பூர்வபாக:
ஊர்த்வ: பாக: த்வத் ஈஹா குண விபவ பரிஜ்ஞாபநை: த்வத் பத ஆப்தௌ
வேத்ய: வேதை: ச ஸர்வை: அஹம் இதி பகவந் ஸ்வேந ச வ்யாசகர்த்த

பொருள் – ஸ்ரீரங்கநாதா! வேதங்கள் தங்களுக்கு எந்தவிதமான ப்ரமாணங்களும் அவசியம் இல்லாமல், தங்களுக்குத் தாங்களே ப்ரமாணங்களாக உள்ளன. இந்த வேதங்களுக்கு - இதிஹாஸம், புராணம், பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை முதலானற்றுடன் கூடிய ஸ்ம்ருதிகள் – வேதவரிகளின் பொருளை விளக்கும் விதமாக பெரும் உபகாரம் செய்தபடி உள்ளன. வேதத்தின் பூர்வபாகம் என்னும் கர்மகாண்டம், உன்னுடைய திருவாராதன முறைகளைத் தெளிவாக ஓதியபடி உள்ளன. உபனிஷத்துக்கள் என்னும் ஞானகாண்டம், உன்னுடைய திருக்கல்யாண குணங்கள், விபூதிகள் முதலானவற்றைக் குறித்துக் கூறுகின்றன. இதனால் உபனிஷத்துக்கள் உன்னுடைய திருவடிகளை அண்டுவதிலேயே குறியாக

உள்ளன. "இப்படியாக அனைத்து வேதங்களின் மூலமும் நானே அறியப்படுகிறேன்", என்று நீயே அருளிச் செய்தாய் அல்லவோ?

20. க்ரியா தத்சக்தி: வா கிம் அபி தத் அபூர்வம் பித்ருஸுர
ப்ரஸாத: வா கர்த்து: பலத: இதி ரங்கேச குத்ருச:
த்வத் அர்ச்சா இஷ்டா பூர்த்தே பலம் அபி பவத் ப்ரீதிஜம் இதி
த்ரயீ வ்ருத்தா: தத்தத் விதி: அபி பவத் ப்ரேரணம்

பொருள் – ஸ்ரீரங்கநாதா! அத்வைதம் முதலான குத்ருஷ்டிகள் கூறுவது – "யாகம் போன்ற கர்மங்கள், அந்தக் கர்மங்களின் சக்தி, அந்தக் கர்மங்கள் மூலம் உண்டாகும் அபூர்வம் என்னும் பலன், பித்ருக்களின் அனுக்ரஹம், தேவர்களின் அனுக்ரஹம் ஆகியவை மட்டுமே கர்மம் இயற்றுபவர்களுக்கு, அந்தக் கர்மத்திற்கான பலனை அளிக்கின்றன (ஸர்வேச்வரன் அல்லன்)" – என்பதாகும். ஆனால் சிறந்தவர்கள் கூறுவது – "குளம் வெட்டுதல் முதலான நற்செயல்கள் (இவை இஷ்டா பூர்த்தம் எனப்படுகிறது) உன்னுடைய ஆராதனமாக உள்ளன, இந்த ஆராதனம் மூலம் உண்டாகும் பலன் என்பது உனது மகிழ்வால் உண்டாகிறது, இப்படிப்பட்ட கர்மங்களை இயற்றும் விதிமுறைகள் உன்னுடைய கட்டளைகளாகவே உள்ளன" – என்பதாகும்.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 15)

## 3-3-4 தர்சயதி ச

பொருள் – வேதம் உணர்த்துகிறது.

ஸித்தாந்தம் – (சூத்திரம் 3-3-2ல் உள்ள பூர்வபக்ஷத்திற்கான ஸித்தாந்தம்) பல சாகைகளில் படிக்கப்பட்ட வித்யை ஒன்றே என ச்ருதி வரிகள் கூறுகின்றன (இந்த வரிகள் மூலம் பல சாகைகளில் கூறப்பட்ட தஹர வித்யை ஒன்றே என்று கூறப்பட்டது). சாந்தோக்ய உபனிஷத் (8-1-1) – தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம் – தஹர ஆகாயம் என்பதற்குள் இருப்பதும், தேடப்படுவதும் எது – என்று கேட்டது. அதன் பின்னர் அதே உபனிஷத் (8-1-2) – கிம் தத்ர வித்யதே யதந்வேஷ்டவ்யம் - தஹர ஆகாயம் என்பதற்குள் தேடத்தகுந்ததாக எது உள்ளது – என்றது. இதனைத் தொடர்ந்து, அவ்விதம் தேடத்தக்கவன் – அபஹதபாப்மா – பாவங்கள் அற்றவன் முதலான எட்டுத் தன்மைகளுடன் கூடிய பரமாத்மாவே என்று விடை தரப்பட்டது. இதே தஹர வித்யை குறித்து தைத்திரீய நாராயணவல்லீ, சாந்தோக்ய உபனிஷத்தில் படிக்கப்பட்ட பரமாத்மாவின் எட்டு குணங்களையும் எடுத்துக் கூறி, அவற்றுடன் உள்ள பரமாத்மா உபாஸிக்கப்பட வேண்டியவன் என்றது. அந்த வரியானது (12-3) – தத்ர அபி தஹரம் ககநம் விசோகஸ் தஸ்மிந் யதந்தாஸ்ததுபாஸிதவ்யம் – தஹர என்னும் ஆகாயம் எந்தவிதமான தோஷமோ வருத்தமோ அற்றதாக உள்ளது; அதனுள் இருப்பதே (பரமாத்மா) உபாஸிக்கப்பட வேண்டியது – என்பதாகும். இரண்டு வித்யைகளும் ஒன்றே என்பதைக் குணங்களைக் கூறுவதன் மூலம் அறியலாம்.

இப்படியாகப் பல சாகைகளில் வெவ்வேறு வித்யைகள் படிக்கப்பட்டிருந்தாலும் அவை ஒன்றே என நிரூபித்தார். இனி இவ்விதம் “ஒன்றே” என்பதால் உள்ள பயனை விளக்க உள்ளார்.

3-3-5 உபஸம்ஹாரர: அர்த்தா பேதாத் விதிசேஷவத் ஸமா நே ச

பொருள் – அனைத்து இடங்களிலும் படிக்கப்படும் வித்யைகள் ஒன்றாக உள்ளதால், ஒரு சாகையில் கூறப்பட்ட தன்மைகளை மற்ற சாகைகளிலும், அந்த வித்யையில் சேர்த்துக் கொள்ளவேண்டும். விதிகள் எப்படிக் கொள்ளப்படுகின்றனவோ அதுபோல், இங்கும் பேதம் இல்லை.

பாஷ்யம் – அனைத்து வேதாந்தங்களிலும் படிக்கப்படும் உபாஸன வித்யைகள் ஒன்றே என்னும்போது, ஒரு சாகையில் உள்ள வித்யைக்கான குணங்களை, அதே பெயருடைய மற்ற சாகை வித்யையிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஏன்? விதிகளுக்குத் துணையாக உள்ள அங்கங்கள் எவ்விதம் பொதுவாக அனைத்திலும் கொள்ளப்படுகிறதோ அதே போன்று ஆகும். வைச்வாநர வித்யை, தஹர வித்யை முதலானவற்றில் விதிகளுக்குத் துணையாகக் கூறப்படும் அங்கங்கள் அனைத்து இடங்களிலும் அந்தந்த வித்யைகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது அனைவரும் ஒப்புக் கொள்வதாகும். இது போன்றே ஒன்றில் கூறப்படாத ஒரு வித்யையின் குணங்கள், மற்றொரு சாகையிலிருந்து அதே வித்யைக்குக் கொள்ளப்பட வேண்டும். சூத்திரத்தில் உள்ள ச என்னும் பதம் இந்தக் கருத்தை வலியுறுத்தும் விதத்தில் உள்ளது.

## அதிகரணம் – 2 – அந்யதாத்வ அதிகரணம்

ஆராயப்படும் விஷயம் – சாந்தோக்யம் மற்றும் ப்ருஹத் உபனிஷத்தில் உள்ள உத்கீத வித்யைகள் வேறுவேறு என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

உத்கீத வித்யை – (இந்தப் பத்தி ஸ்ரீபாஷ்யத்தில் இல்லை. விளக்குவதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது). எதிரிகளை வீழ்த்துவதற்கு ஸாம கானத்தில் பாடப்படும் உத்கீதம் என்னும் பகுதி வேதங்களில் உள்ளது. அசுரர்களை வீழ்த்துவதற்குத் தேவர்கள் உத்கீதத்தைக் கைக்கொள்ள முடிவு செய்தனர். ஆனால் இந்த உத்கீதம் என்பதை எந்த உறுப்பைக் கொண்டு பாடுவது என்ற குழப்பம் உண்டானது.

முதலில் வாக்கு தேவதை கொண்டு பாடுவது என்று முடிவு செய்தனர். முதலில் வெற்றி உண்டானபோதும், பின்னர் வாக்கில் உண்டான தோஷங்கள் காரணமாக, இந்த முயற்சி பலிக்கவில்லை. இப்படியாக ஒவ்வொரு உறுப்பின் தேவதையைக் கொண்டு முயற்சித்து தோல்வியே கிட்டியது. இறுதியாகப் ப்ராணன் கொண்டு உத்கீதம் பாடி வென்றனர். இங்கு உணர்த்தப்படுவது அனைத்து உறுப்புகளும் தோஷத்துடன் கூடியவையே ஆகும். ஆனால் ப்ராணன் மட்டுமே எந்தவிதமான தோஷங்களாலும் பாதிக்கப்படாமல் உள்ளது என்பதாகும்.

### 3-3-6 அந்யதாத்வம் சப்தாதிதி சேத் ந அவிசேஷாத்

பொருள் – வேதவரிகளின் மூலம் வேறுபாடு விளங்குகிறது என்பது பொருந்தாது, காரணம் – வேறுபாடு இல்லாமல் உள்ளதால்.

விஷயம் – ஆக விதிவாக்யங்கள் முதலானவை ஒன்றாகவே உள்ளதால் வித்யைகள் ஒன்றே என இதுவரை கூறப்பட்டது. மேலும் வித்யைகள் ஒன்று என்பதால், ஒரு சாகையில் கூறப்பட்ட வித்யைக்கான குணங்களை, மற்றொரு சாகையில் கூறப்பட்ட அதே வித்யைக்கும் பொருத்திக் கொள்ளவேண்டும் என்றும் கூறப்பட்டது. இனி, மேலும் சில வித்யைகள் ஆராயப்பட உள்ளன. அவற்றைப் பேதப்படுத்தும் விதமாக அமைந்துள்ள விதிவாக்யங்கள் வெவ்வேறானவையா என ஆராயப்பட உள்ளது. யஜுர் வேதத்தில் உள்ள ப்ருஹத் உபனிஷத், ஸாம வேதத்தில் உள்ள சாந்தோக்ய உபனிஷத் ஆகிய இரண்டிலும் உத்கீத வித்யை கூறப்பட்டுள்ளது. இதனை ஆராயலாம்.

ப்ருஹத் உபனிஷத்தில் உள்ள இந்த வித்யைக்கான பகுதி (1-3-1) – த்வயா ஹ ப்ரஜாபத்யா தேவாச்ச அஸுராச்ச – ப்ரஜாபதியின் பிள்ளைகள் தேவர்களும் அசுரர்களும் ஆகிய இரண்டு பிரிவினர் – என்று தொடங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உத்கீதம் மூலம் அசுரர்களை அழிப்பதாகச் சபதம் மேற்கொண்டு, வாக்கு முதலானவைகளைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது. இதனை ப்ருஹத் உபனிஷத் (1-3-1) – தே ஹ தேவா ஊசு: ஹந்தா அஸுராந் யஜ்ஞே உத்கீதேந அத்யயாம: - தேவர்கள் கூறியது, “இந்த அசுரர்களை யஜ்ஞத்தில் உத்கீதம் மூலம் அழிப்போம்”, என்பதாகும் – என்று கூறியது. இதன் பின்னர் உத்கீதம் பாட

ப்ராணனை உபாயமாகப் பற்றியதாகக் கூறப்பட்டது. இந்த வரியானது ப்ருஹத் உபனிஷத் (1-3-7) – அத ஹ ஏநம் ஆஸந்யம் ப்ராணமூசு: - தங்களது மூச்சுக்காற்றான ப்ராணனிடம் கூறினார்கள் – என்பதாகும். ஆக உத்கீதம் பற்றித் தங்கள் ப்ராணனிடம் கூறி, எதிரிகளான அசுரர்களை வெல்ல முயற்சித்தனர் என்றாகிறது. இதனை ப்ருஹத் உபனிஷத் (1-3-7) – பவத்யாத்மநா பராஸ்யத்விஷந் ப்ராத்ருவ்யோ பவதி ய ஏவம் வேத – அவன் வலிமை உள்ளவன் ஆகிறான், அவனது விரோதிகள் அழிக்கப்படுகின்றனர், இப்படியாக அறிந்தவன்… - என்று கூறியது.

சாந்தோக்ய உபனிஷத்தில் (1-2-1) – தேவாஸுராஹவை யத்ரஸம்யேதிரே – எப்போது தேவர்களும் அசுரர்களும் யுத்தம் செய்தனரோ – என்று தொடங்கப்பட்டது. அதன் பின்னர் தேவர்கள் உத்கீதம் மூலம் அசுரர்களை வெல்வர் என்பதை (1-2-1) – தத்தஹ தேவா உத்கீதம் ஆஜஹ்ரு: அநேந ஏநாந் அபிஹநிஷ்யாம: - அதன் பின்னர் தேவர்கள் உத்கீதத்தை உபாயமாக்க் கொண்டு அசுரர்களை வெல்வோம் என்றனர் – என்று கூறியது. அடுத்து வாக்கு முதலானவற்றுடன் உத்கீதத்தைத் தொடர்பு வைத்துக் கூறிய பின்னர், அதில் பல தோஷங்கள் உண்டாகவே, ப்ராணனுடன் உத்கீதத்தைத் தொடர்புபடுத்தி அசுரர்களை வெல்வது பற்றிக் கூறப்பட்டது. இந்த வரிகள் கீழே உள்ளன:

சாந்தோக்ய உபனிஷத் (1-2-7) – அத ஹ ஏவாயம் முக்யப்ராணம் தம் உத்கீதம் உபாஸாம் சக்ரிரே – முக்கிய ப்ராணனை உபாஸனை செய்தனர்.
சாந்தோக்ய உபனிஷத் (1-2-8) – யதா அச்மாநமாகணம் ருத்வா வித்வம் ஸதே ய ஏவம் ஹவை ஸவித்வம்ஸதே ய ஏவம் விதி பாபம் காமயதே – பாறாங்கல்லில் மோதிய பொருளானது சிதைவது போன்று, முக்கிய ப்ராணனை அழிக்கவந்த அசுரர்கள் நாசம் அடைந்தனர்.

இப்படியாக விரோதிகள் அழிவதற்காக உத்கீதத்தை ப்ராண தேவதை இசைப்பதாகக் கூறப்பட்டது. இங்கு உபாஸநம் என்பது அவசியம் என்று கூறும் விதிவாக்யம் இல்லை என்றாலும், பலன் கூறப்பட்டுள்ளதால், உபாஸநம் பற்றிய விதி உள்ளதாகவே கொள்ளவேண்டும். உத்கீதத்தைப் பொறுத்தவரையில் அதன் பலன் என்பது அர்த்தவாதமாக (ஒன்றைப் புகழ்வதற்காக மட்டுமே கூறப்படும்

சொற்கள்) மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது என்று வாதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. காரணம் அர்த்தவாதம் என்பது ஒன்றின் மீது ஆசை உண்டாக்கவே கூறப்படுவது ஆகும். இங்கும் அப்படியே கொள்ளவேண்டும். ப்ரஹ்மசூத்ரம் (1-3-25) மூலம் அர்த்தவாதம் என்பதும் ஒருவகையான ப்ரமாணமே என்று அறியலாம்.

சந்தேகம் – ப்ருஹத் உபனிஷத்தில் ஓதப்பட்ட உத்கீத வித்யையும், சாந்தோக்யத்தில் ஓதப்பட்ட உத்கீதமும் ஒன்றா? அல்லது வெவ்வேறா?

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 15)

## அத்யாயம் – 6 – பரதேவதாபாரமார்த்த்யாதிகாரம்

(பரதேவதை யார் என நிரூபித்தல்)

ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிகஸமதிகதா துல்யதைக்யம் த்ரயாணாம்
அந்யத்ர ஐச்வர்யம் இத்யாதி அநிபுணா பணிதீ: ஆத்ரியந்தே ந ஸந்த:
த்ரயந்தை: ஏககண்டை: தத் அநுகுண மநு வ்யாஸ முக்ய உக்திபி: ச
ஸ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகிலதநு: முக்தித: முக்தபோக்ய:

பொருள் – சாஸ்த்ர ஞானம் அற்றவர்கள் கூறுவது – ஆத்மாக்கள் எல்லாம் ஒன்றே, இந்திரன் முதலான தேவதைகள் ஒன்றே, ப்ரம்மன் உள்ளிட்ட மூன்று மூர்த்திகளின் தன்மைகளை அறிந்து கொண்டால் அவர்கள் ஒன்றே,இவர்களின் ஆத்மஸ்வரூபம் ஒன்றே, இவர்கள் மூவரைக் காட்டிலும் மேலான ஒருவனே ஈச்வரன் – போன்றவையாகும். உண்மை எது, பொய் எது என்று பிரித்து அறியக்கூடியவர்கள், இந்தச் சொற்களை உண்மை என்று ஏற்பதில்லை. அனைத்து உபனிஷத்துக்களும் ஒரே கருத்தை முழங்குகின்றன, இந்த உபனிஷத்துக்களின் கருத்தைப் பின்பற்றியே மனு, வ்யாஸர் முதலானவர்களின் ஸூக்திகள் உள்ளன, இந்தக் கருத்து என்னவெனில் – அனைத்தையும் சரீரமாகக் கொண்டவன், மோக்ஷத்தை அளிக்கக்கூடியவன், முக்தர்களால் அனுபவிக்கக்கூடியவன் பெரியபிராட்டியுடன் கூடியுள்ள நாராயணனே ஆவான்; அவனே நமக்கும் அனைவருக்கும் எஜமானன் – என்பதாகும்.

## பரதேவதை யார் என்று ஏன் நிர்ணயம் செய்ய வேண்டும்

உக்தவைதர்ம்யங்களாலே பொதுவிலே ப்ரக்ருதி – புருஷ – ஈச்வர – விவேகம் பண்ணினாலும் ஒன்றுந்தேவும் இத்யாதிகளிற்படியே பர தேவதாவிசேஷ நிச்சமில்லாதபோது உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால் என்கிற பரமைகாந்தித்வம் கூடாமையாலும், பரமைகாந்திக்கல்லாது வ்யவதாந ரஹிதமாக மோக்ஷம் கிடையாமையாலும் ஈச்வரன் இன்ன தேவதாவிசேஷமென்று நிஷ்கர்ஷிக்க வேணும்.

விளக்கம் – இதுவரை கூறப்பட்ட பல விவரங்கள் மூலம் அனைத்துத் தத்துவங்களும் ப்ரக்ருதி – புருஷன் – ஈச்வரன் என்று பிரிக்கப்பட்டன. இப்படிப் பிரிக்க முடிந்த ஞானம் மட்டுமே கொண்டு, இன்னதுதான் அனைத்திலும் உயர்ந்த தெய்வம் என்று திருவாய்மொழியில் (4-10-1) – ஒன்றுந்தேவும் – கூறியது போன்று, நம்மால் உணர இயலாது. இவ்விதம், இன்னதுதான் உயர்ந்த பரதெய்வம் என்று முடிவு செய்ய, திருவாய்மொழி (4-6-10) - உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால் – என்னும் ஞானம் அவசியமாகும். இப்படிப்பட்ட பரமைகாந்தி நிலையில் உள்ளவர்களுக்கு அல்லாது, வேறு யாருக்கும் மோக்ஷமானது மிகவும் விரைவாகக் கிட்டுவதில்லை. ஆகவே இன்னதுதான் பரதெய்வம் என்று நிரூபிப்பது அவசியம் ஆகும்.

## பல மதங்களின் கண்டன வாதங்கள்

அவ்விடத்தில் சேதநாசேதநங்களுடைய அத்யந்தபேதம் ப்ரமாண ஸித்தமாகையாலே எல்லாம் பரதேவதையாயிருக்கிற ப்ரஹ்மத்ரவ்யமென்கிற பக்ஷம் தடியாது. ஸ்வபாவஸித்தமான ஜீவேச்வரபேதமும் அப்படியே தேவாதிரூபரான ஜீவர்களுடைய அந்யோந்யபேதமும் ஸுக துக்காதி வ்யவஸ்தையாலே ப்ரமாணிகமாகையால் ஸர்வாந்தர்யாமி ஒருவனேயாகிலும் ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதி ஸர்வதேவதைகளும் ஈச்வரனோடும் தன்னில்தானும் அபிந்நர் என்கிற பக்ஷம் கூடாது.

விளக்கம் – ப்ரமாணங்கள் மூலம் சேதனங்களும் அசேதனங்களும் வெவ்வேறு என்று தெளிவாக அறியப்படுகிறது. ஆகவே அனைத்தும் ப்ரஹ்மத்தின் அங்கம் என்னும் வாதம் ஏற்க இயலாது. இது போன்றே ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும்

இடையே வேறுபாடு உண்டு. மேலும், சுக துக்கங்களில் உள்ள நிலை மாறுபாடு காரணமாகவும், பல ப்ரமாணங்கள் மூலமும் தேவர்களாக உள்ள ஜீவன்களுக்கு இடையே உள்ள வேறுபாட்டை உணரலாம். அனைத்தின் உள்ளே அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரன் ஒருவனே என்றாலும் – ப்ரம்மன், ருத்ரன், இந்த்ரன் ஆகியவர்களுக்கும் ஈச்வரனுக்கும் பேதம் இல்லை என்பதையும், இவர்களுக்கு இடையில் (ஒருவருக்கு ஒருவர்) பேதம் இல்லை என்பதையும் ஏற்க இயலாது.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் பரதேவதை அல்லர்

இத்தேவதைகளில் ப்ரதாநராகச் சொல்லுகிற ப்ரம்மருத்ரேந்த்ராதிகளுக்குக் கார்யத்வ கர்மவச்யத்வங்கள் ப்ரமாணிகங்களாகையாலும்,

ஆபூதஸம்ப்லவே ப்ராப்தே ப்ரலீநே ப்ரக்ருதௌ மஹாந்
ஏகாஸ்திஷ்டதி விச்வாத்மா ஸ து நாராயண: ப்ரபு:

ஆத்யோ நாராயணோ தேவ: தஸ்மாத் ப்ரஹ்மா த்தோ பவ:

பரோ நாராயணோ தேவ: தஸ்மாத் ஜாதச்சதுர்முக:
தஸ்மாத் ருத்ரோ அபவதேவி

இத்யாதிகளிலே

ததஸ்த்வமாபி துர்தர்ஷ: தஸ்மாத் அபவாத் ஸநாதநம்
ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜக்மிவாந்

என்கிறபடியே ஸ்வேச்சாவதீர்ணனாய் த்ரிமூர்த்தி மத்யஸ்தனான விஷ்ணு நாராயணாதி சப்தவாச்யன் தானே தன்னுடைய பூர்வாவஸ்தையாலே ஸர்வஜகத்துக்கும் காரணமென்கையாலும்,

நித்யம் ஹி நாஸ்தி ஜகதி பூதம் ஸ்தாவர ஜங்கமம்
ருதே தமேகம் புருஷம் வாஸுதேவம் ஸநாதநம்

என்கிறபடியே அவனே நித்யனென்கையாலும், த்ரிமூர்த்திகளும் ஸமரென்றும், த்ரிமூர்த்திகள் ஏகதத்த்வமென்றும், த்ரிமூர்த்யுத்தீர்ணன் ஈச்வரனென்றும், த்ரிமூர்த்திகளுக்குளே ப்ரஹ்மாவாதல், ருத்ரனாதல் ஈச்வரனென்று சொல்லுகிற ஸாம்ய ஐக்ய உத்தீர்ண வ்யக்த்யந்தரபக்ஷங்கள் தடியா.

விளக்கம் – தேவதைகளில் ப்ரதானமாக உள்ளவர்கள் என்று கூறப்படும் ப்ரம்மன், ருத்ரன் மற்றும் இந்த்ரன் ஆகியோர் கர்மவசப்பட்டவர்கள் என்பது பல ப்ரமாணங்கள் மூலம் அறியலாம். கீழே உள்ள பல வரிகள் காண்க:

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (210-24) - ஆபூதஸம்ப்லவே ப்ராப்தே ப்ரலீநே ப்ரக்ருதௌ மஹாந் ஏகாஸ்திஷ்டதி விச்வாத்மா ஸ து நாராயண: ப்ரபு: - பஞ்சபூதங்கள் லயத்தை அடைந்தபோது, மஹத் என்பது ப்ரக்ருதியில் லயித்தபோது, அனைத்தின் ஆத்மாவான ஒருவன் மட்டுமே உள்ளான், அவனே அனைத்தின் ப்ரபுவான நாராயணன்.

- வராஹ புராணம் (25-6) - ஆத்யோ நாராயணோ தேவ: தஸ்மாத் ப்ரஹ்மா ததோ பவ: - தொடக்கத்தில் நாராயணன் மட்டுமே உள்ளான்; அவனிடமிருந்து ப்ரம்மன் தோன்றினான்.

- வராஹ புராணம் (90-3) - பரோ நாராயணோ தேவ: தஸ்மாத் ஜாதச்சதுர்முக: தஸ்மாத் ருத்ரோ அபவதேவி – தேவியே! நாராயணனே மேலான தெய்வம்; அவனிடமிருந்து நான்முகன் (ப்ரம்மன்) தோன்றினான்; ப்ரம்மனிடமிருந்து ருத்ரன் தோன்றினான்.

மேலும், இராமாயணம் உத்தர காண்டம் (101-26) - ததஸ்த்வமாபி துர்தர்ஷ: தஸ்மாத் அபவாத் ஸநாதநம் ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜக்மிவாந் – ப்ரம்மன் கூறுவது: யாராலும் வெல்ல முடியாதவனாகிய நீ, அனைவரையும் காக்கும் பொருட்டு, நாராயணன் என்னும் உயர்ந்த ரூபத்திலிருந்து விஷ்ணுவாகத் தோன்றினாய் – போன்ற வரிகள் மூலம், தன்னுடைய விருப்பம் காரணமாகவே நாராயணன், மூன்று மூர்த்திகளில்

நடுநாயகமான விஷ்ணுவாகத் தோன்றினான் என்பது விளங்கும். விஷ்ணு, நாராயணன் என்னும் பல திருநாமங்களால் கூறப்படும் அவனே, அவனது அனைத்து நிலைகளிலும் இந்த உலகின் காரணமாக உள்ளான். மஹாபாரதம் சாந்திபர்வம் (347-32) - நித்யம் ஹி நாஸ்தி ஜகதி பூதம் ஸ்தாவர ஜங்கமம் ருதே தமேகம் புருஷம் வாஸுதேவம் ஸநாதநம் – எப்போதும் உள்ளவன் என்று முழங்கப்படும் புருஷனாகிய வாஸுதேவனைத் தவிர இந்த உலகில் தாவரமோ மற்ற விலங்குகளோ நிரந்தரமாக இருப்பதில்லை – என்று கூறியது. இதன் மூலம் அவனே நித்யன் என்பது விளங்குகிறது.

மேலே கூறப்பட்ட பல காரணங்களால் – மூன்று மூர்த்திகளும் சமம், மூன்று மூர்த்திகளும் ஒன்று, மூன்று மூர்த்திகளுக்கும் மேலான ஈச்வரன் ஒருவன், மூன்று மூர்த்திகளுக்குள் ஈச்வரன் என்பது ப்ரம்மனோ அல்லது ருத்ரனோ ஆவார்கள் – என்று கூறப்படும் வாதங்கள் தள்ளப்படுகின்றன. இந்த வாதங்கள் மூலம் வெளிப்படும் சமத்வம், ஒரே தன்மை, இவற்றைக் காட்டிலும் உயர்ந்த ஒன்று போன்ற கருத்துக்கள் அனைத்தும் ப்ரமாணங்களுக்கு முரணாக உள்ளன.

## ப்ரம்மன், ருத்ரன் போன்றோர் படைக்கப்பட்டவர்களே

ப்ரம்மருத்ராதிகள் ஸர்வேச்வரனுக்குக் கார்யபூதரென்னுமிடம், தத்விஸ்ருஷ்டஸ்ஸ புருஷோ லோகே ப்ரஹ்மேதி கீர்த்யதே இத்யாதிகளாலும்,

ஸங்க்ஷிப்ய ச புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி
மஹார்ணவே சாயாந: அப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜந:

க இதி ப்ரஹ்மணோ நாம ஈச: அஹம் ஸர்வதேஹிநாம்
ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவநாமவாந்

அஹம் ப்ரஸாதஜஸ்தஸ்ய கஸ்மிம்ச்சித் காரணாந்தரே
த்வம் ச ஏவ க்ரோதஜஸ்தாத் பூர்வஸர்க்கே ஸநாதநே

என்று எதிரி கையாலே விடுதீட்டானபடியே அவர்கள் தங்கள் பாசுரங்களாலும் ஸித்தம்.

விளக்கம் – ப்ரம்மன், ருத்ரன் முதலானோர் ஸர்வேச்வரனிடமிருந்தே தோன்றியவர்கள் என்பது மநு ஸ்ம்ருதி (1-11) - தத்விஸ்ருஷ்டஸ்ஸ புருஷோ லோகே ப்ரஹ்மேதி கீர்த்யதே – நாராயணனிடமிருந்து தோன்றிய அந்தப் புருஷன் உலகினரால் ப்ரம்மன் எனப்படுகிறான் – போன்ற வரிகள் மூலம் உணரலாம். மேலும் கீழே உள்ள பல வரிகளும் காண்க:

- இராமாயணம் உத்தர காண்டம் (104-4) - ஸங்க்ஷிப்ய ச புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி மஹார்ணவே சாயாந: அப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜந: - உனது ஸங்கல்பம் மூலம் அந்த உலகை அழித்து, ப்ரளயத்தின் ஸமுத்திரத்தில் சயனித்தபடி என்னைப் (ப்ரம்மன்) படைத்தாய்.

- ஹரி வம்சம் (3-131-4) - க இதி ப்ரஹ்மணோ நாம ஈச: அஹம் ஸர்வதேஹிநாம் ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவநாமவாந் – க என்பது ப்ரம்மன், நான் (சிவன்) அனைத்து உயிர்களின் ஈசன், நாங்கள் இருவரும் உனது திருமேனியிலிருந்தே தோன்றினோம், இதனால் நீ கேசவன் எனப்படுகிறாய்.

- மஹாபாரதம் சாந்தி பர்வம் (352-62) - அஹம் ப்ரஸாதஜஸ்தஸ்ய கஸ்மிம்ச்சித் காரணாந்தரே த்வம் ச ஏவ க்ரோதஜஸ்தாத் பூர்வஸர்க்கே ஸநாதநே – சிவனிடம் ப்ரம்மன், "எம்பெருமான் ஒரு காலகட்டத்தில் மகிழ்வுடன் இருக்க, அப்போது நான் தோன்றினேன். அது போன்று ஒரு காலகட்டத்தில் அவன் கோபத்துடன் இருந்தபோது நீ தோன்றினாய்", என்றான்.

மேலே உள்ள வரிகளானவை - பல தெய்வங்களும் தங்களுக்குத் தாங்களே எம்பெருமானால் படைக்கப்பட்டவர்கள் என்று வாக்குமூலம் கொடுப்பதாக அமைந்துள்ளது காண்க.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்

(பகுதி – 15)

81. பிறர்க்கு உரியனான அன்று தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி மீட்கலாம்; தனக்கென்றுமன்று யோக்யதையுங்கூட அழியும்.

அவதாரிகை - தனக்கும் பிறர்க்கும் உரித்தன்று என்று அந்யசேஷத்வத்தை நிஷேதித்த உகாரத்தை விவரிக்கிறதாகில், பிறர்க்கு உரித்தன்றென்றத்தையும் விவரியாமல், தனக்குரியனன்று என்று இத்தையே விவரிப்பானேன்? என்கிற சங்கையிலே அருளிச் செய்கிறார் - பிறர்க்கு உரியனானவன்று - என்று தொடங்கி.

விளக்கம் - உகாரம் என்பது ஜீவன், தனக்கும் பிறர்க்கும் உரியவன் அல்லன் என்பதைக் கூறி, மற்றவர்களுக்கு அடிமை அல்லன் என்பதை விவரிக்கிறது. நம: என்பது உகாரத்தை விவரிக்கிறது என்றால், இதன் மூலம் “ஜீவன் தனக்கு உரியவன் அல்லன்” என்பது மட்டும் மீண்டும் கூறப்பட்டு, “ஜீவன் மற்றவர்களுக்கு உரியவன் அல்லன்”, என்பது ஏன் கூறாமல் விடப்பட்டது? இதற்கான விடையை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, அந்யசேஷபூதனான அன்று, சேஷத்வத்துக்கு இசைகையாலே, அந்யரிற்காட்டில் தனக்கு உண்டான ஸர்வகாரணத்வ ஸர்வரக்ஷகத்வ ஸர்வ சேஷித்வாதியான வைலக்ஷண்யத்தைக் காட்டி, அந்நிலையில் நின்றும் மீட்கலாம். தனக்குரியவன் என்று நிற்குமன்று, த்வம் மே என்றால், அஹம் மே என்னுமது ஒழிய சேஷத்வத்துக்கு இசையாமையாலே, மீட்கைக்கு யோக்யதையுங்கூட இல்லையாய்விடும் – என்கை.

விளக்கம் – ஜீவன், ”மற்றவர்களுக்குத் தான் அடிமைப்பட்டவன்”, என்று எண்ணும்போது, அவன் தனக்குத்தானே அடிமைப்படுதல் என்ற தன்மை மறைமுகமாக உள்ளது என்பது புலப்படுகிறது. அப்படிப்பட்ட எண்ணம் கொண்ட அவனை ஸர்வேச்வரன் மிகவும் எளிதாகத் தனக்கே உரித்தான அனைத்தின் காரணம் (ஸர்வகாரணத்வம்), அனைத்தையும் காக்கும் தன்மை (ஸர்வரக்ஷகத்வம்), அனைத்திற்கும் எஜமான்னாக உள்ள தன்மை (ஸர்வசேஷித்வம்) போன்றவற்றைக் காண்பித்துத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள முடியும். ஆனால் அந்த ஜீவன், ”தனக்கே தான் அடிமை”, என்ற எண்ணத்துடன் இருந்தால் என்றால் நடப்பது என்ன? எம்பெருமான் அவனிடம் - த்வம் மே - நீ எனக்கு உரியவன் – என்றால், அதற்கு ஜீவன் – அஹம் மே - நான் எனக்கே உரியவன் – என்று கூறி, மறுத்து விடுவான். அதன் பின்னர் அந்த ஜீவனை வசப்படுத்தல் என்பது கிகவும் கடினமாகும்.

82. இத்தால் விரோதியைக் கழிக்கிறது.

அவதாரிகை – இந் நமஸ்ஸால் செய்கிற அம்ஸந்தான் எது ? என்ன அருளிச்செய்கிறார் - இத்தால் விரோதியைக் கழிக்கிறது – என்று.

விளக்கம் - நம: என்பதன் மூலம் என்ன நிகழ்கிறது என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். இதன் மூலம் ஜீவனின் விரோதிகள் நீங்குகின்றன.

83. விரோதிதான் மூன்று.

அவதாரிகை - இதுதான் ஒன்றோ? பலவோ? என்ன அருளிச்செய்கிறார் - விரோதிதான் மூன்று – என்று.

விளக்கம் - ஜீவனின் விரோதிகள் ஒன்றா அல்லது பல உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். விரோதிகள் மூன்றாகும்.

84. அதாவது, ஸ்வரூப விரோதியும், உபாய விரோதியும், ப்ராப்ய விரோதியும்.

அவதாரிகை - அம்மூன்றுதான் எது? என்ன அருளிச்செய்கிறார் - அதாவது, ஸ்வரூப விரோதியும், உபாய விரோதியும், ப்ராப்ய விரோதியும் – என்று.

விளக்கம் – அந்த மூன்று விரோதிகள் எவை என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – இத்தால் ப்ரதமபதத்திற் சொன்ன ஸ்வரூபத்துக்கு விரோதியும், இப்பதத்தில் ஆர்த்தமாக ஸித்திக்கிற உபாயத்துக்கு விரோதியும், உத்தரபதத்தில் சொல்லுகிற ப்ராப்யத்துக்கு விரோதியுமென்கை. இந்நமஸ்ஸுதான் காகாக்ஷி ந்யாயத்தாலே பூர்வோத்தர பதங்களிற் சொல்லுகிற ஸ்வரூப ப்ராப்யங்களினுடைய விரோதிகளைக் கழிக்கக் கடவதாயிறே இருப்பது.

விளக்கம் - இவையாவன – ப்ரணவத்தின் மூலம் உணர்த்தப்பட்ட ஆத்மாவினுடைய ஸ்வருபத்தின் விரோதி, நம: என்ற பதத்தின் மூலம் உணர்த்தப்பட்ட ”ஜீவனுக்கு ஸர்வேச்வரனே உபாயம்” என்ற எண்ணத்திற்கான விரோதி, நாராயணாய என்ற பதத்தின் மூலம் உணர்த்தப்படும் கருத்தான ”கைங்கர்யமே ஜீவனின் குறிக்கோள்” என்பதற்கான விரோதி – ஆகிய மூன்றும் ஆகும். காக்கையின் ஒரே கண்விழியானது அதன் இரண்டு கண்கள் வழியாகவும் காண்பது போன்று, நம: என்ற ஒரே பதமானது ஸ்வரூபம் மற்றும் ப்ராப்யம் (முதல் மற்றும் மூன்றாம் விரோதிகள்) ஆகிய இரண்டையும் விளக்குகிறது.

85. ஸ்வரூப விரோதி கழிகையாவது - யானே நீ என்னுடைமையும் நீயே என்றிருக்கை; உபாய விரோதி கழிகையாவது - களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் - என்றிருக்கை; ப்ராப்ய விரோதி கழிகையாவது - மற்றை நங்காமங்கள் மாற்று என்றிருக்கை.

அவதாரிகை - இவ்விரோதித்ரயமும் கழிகையாவதுதான் எது? என்ன - அது தன்னை அடைவே அருளிச்செய்கிறார், மேல் மூன்று வாக்யத்தாலே.

விளக்கம் - இந்த மூன்று விரோதிகளும் நீங்குதல் என்பது என்ன? என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – ஸ்வரூப விரோதி இத்யாதி - அதாவது ஸ்வரூபத்துக்கு விரோதி - யானே என்தனதே - என்றிருக்கையாகையாலே. அது கழிகையாவது – யானே

நீயென்னுடைமையும் நீயே - என்று ஆத்ம ஆத்மீயங்கள் இரண்டும் அத்தலைக்கு ப்ரகாரதயா சேஷம் என்றிருக்கை – என்கை. உபாய விரோதி இத்யாதி - அதாவது உபாயத்துக்கு விரோதி ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமாகையாலே, அது கழிகையாவது – களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் என்று – துக்கத்தைப் போக்குவாய் போக்காதொழிவாய், வேறொரு ரக்ஷக வஸ்துவையுடையேனல்லேன் என்றிருக்கை - என்கை. ப்ராப்திவிரோதி இத்யாதி – அதாவது, ப்ராப்யத்துக்கு விரோதி ஸ்வப்ரயோஜந புத்தியாகியாலே, அது கழிகையாவது – மற்றை நங்காமங்கள் மாற்று என்று - உன்னுகப்புக்குப் புறம்பான எங்களுடைய ஆசையைப் போக்கு – என்றிருக்கை – என்கை.

விளக்கம் - ஜீவனின் ஸ்வரூபத்திற்கான விரோதி என்பது திருவாய்மொழியில் (2-9-9) - கூறப்பட்டபடி – யானே என் தனதே - நான் எனக்கு உரியவன் என்ற எண்ணம் ஆகும். இந்த எண்ணம் எவ்விதம் நீங்கும் என்றால், திருவாய்மொழி (2-9-9) கூறுவது போல் - யானே நீ என் உடைமையும் நீயே – என்று தானும் தன்னைச் சேர்ந்தவையும் ஸர்வேச்வரனுக்கு உரிமை என்று கூறுவதன் மூலம் ஆகும். உபாய விரோதி என்பது - தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முயல்வது ஆகும். இந்த விரோதி எவ்விதம் கழியும் என்றால், திருவாய்மொழி கூறுவது போல் (5-8-8) – களைவாய் துன்பம் களையாது ஒழிவாய் களைகண் மற்றிலேன் – என்பதற்கு ஏற்ப – என்னுடைய துயரத்தை நீ நீக்கினாலும் நீக்காவிட்டாலும், நான் உன்னைத் தவிர வேறு யாரையும் நாடமாட்டேன் – என்ற சிந்தனையுடன் இருக்கும் நிலையாகும். ப்ராப்ய விரோதி என்பது, தனக்குப் பயன்படும்படியான செயலைச் செய்து கொள்வது ஆகும். இது எப்படிக் கழியும் என்றால், திருப்பாவை (30) - மற்றை நம் காமங்கள் மாற்று – என்பதற்கு ஏற்ப - உன்னை மகிழ்விப்பது தவிர எங்களுக்கு உள்ள மற்ற ஆசைகளை விலக்குவாயாக – என்ற சிந்தனையுடன் இருப்பது ஆகும்.

ஸ்ரீபிள்ளை லோகாசார்யார் திருவடிகளே சரணம்

ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

## சிறிய திருமடல்
(பகுதி – 15)

(வல்வினையேன்) - என்னெஞ்சும் எனக்கு உதவாதபடியான மஹாபாபத்தைப் பண்ணினேன். (ஊராருகப்பதேயாயினேன்) - தங்களபிமதஸித்தி ஸாதநாநுஷ்ட்டாநத்தாலே என்றிருக்குமவர்களைப்போலே, என்னபிமதத்துக்கும் நான் உத்ஸாஹிக் கும்படியானேன்; ஊரார்வார்த்தை – "அவனாலே பேறு என்றிருந்த இவள் கண்டாயே உண்டபடி; இவளைப்போலே உண்ணுமத்தனை அவன் கை பார்த்திருந்தவர்கள்" என்பர்களே அவர்கள்.

விளக்கம் – (வல்வினையேன்) – என்னுடைய நெஞ்சமே எனக்கு எந்த உதவியும் செய்யாதபடி மிகுந்த பாவங்கள் செய்தேன். (ஊரார் உகப்பதே ஆனேன்) - தாங்கள் ஆசைப்பட்டதை பெறவேண்டும் என்பதற்காக, அதற்கான உபாயங்களை செய்தே ஆக வேண்டும் என்று எண்ணுபவர்கள் உண்டு. நானும், எனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் போன்று ஆனேன். ஊரார் வார்த்தை = அவன் மூலமே பேறு பெற வேண்டும் என்று காத்திருந்த இவள் நிலையைக் கண்டீர்களா? அவன் மட்டுமே உபாயம் என்று இருப்பவர்களின் கதி இப்படியே ஆகும் – என்று தகாதபடி கூறுவார்கள்.

இப்படி ஆற்றாமை மிக்கால் சில பேரோடே உசாவிதரிக்க வேண்டாவோவென்னில்; (மற்றெனக்கிங்காராய்வாரில்லை) - என்னெஞ்சம் எனக்கு உதவாதிருக்க வேறு நமக்கு இங்கு உசாத்துணையுண்டோ? "மற்றில்லை" என்கையாலே இன்னமும் அவனே வந்து ஆராயில் ஆராயுமத்தனை என்கை; "அவ்வருளல்லன அருளுமல்ல" என்றும், "வையகத்துப் பல்லார்ருளும் பழுது" என்றுமிறே இவர்கள் தாங்கல் அறுதியிட்டிருப்பதும். (அழல்வாய் மெழுகு போல் நீராயுருகுமென்னாவி) - நெஞ்சு உதவாதென்னலாமோ? நெஞ்சைப்பிடித்து

தரித்திருக்கவேண்டாவோ என்னில், அக்நிஸகாசத்திலே மெழுகு போலே இற்றுப் போகாநின்றது என்னுடைய ஆதமவஸ்து.

விளக்கம் - இவ்விதம் பிரிவுத் துன்பம் அதிகமானபோது, மற்றவர்களிடம் எதேனும் பேசி ஆதரவு தேடலாமே என்றால்; (மற்றெனக்கு) – என்னுடைய நெஞ்சமே எனக்கு உதவி செய்யாமல் உள்ளபோது, எனக்குப் பேச்சுத் துணைக்கு யார் உள்ளனர். "மற்றில்லை" என்ற பதம் மூலம் அவனே வந்து எனது நிலையை உணர்ந்தால் மட்டுமே பிழைக்க முடியும் என்று உணர்த்தப்பட்டது. இந்தக் கருத்தை திருவாய்மொழி (9-9-6) - அவ்வருளல்லன அருளுமல்ல – என்றும், முதல் திருவந்தாதி (15) - வையகத்துப் பல்லார்ருளும் பழுது – என்றும் கூறியது காண்க. (அழல் வாய்) – என்னுடைய நெஞ்சம் உதவவில்லை என்று ஏன் கைவிடவேண்டும்? நெஞ்சத்தை விடாமல் பிடித்து நிறுத்தலாமே என்றால் - நெருப்பின் முன்னே உருகும் மெழுகு போன்று எனது ஆத்மா அவனை எண்ணி உருகி நிற்கிறது.

(நெருங்கண்களூராருறங்கிலும் தானுறங்கா) – இப்படி ஆற்றாமை விளைந்ததாகில், நித்ரையாலே அத்தைப் போக்கிணாலோவென்னில், "ஆயுமமருலகுந்துஞ்சிலும்" என்கிறபடியே எல்லாருமுறங்கிலும் என் கண்கள் உறங்குகிறதில்லை. (நெடுங்கண்கள்) - கண் பரப்பெல்லாம் தலைச்சுமையாயிற்று. அஸிதேக்ஷணையிறே. (ஊராருறங்கிலும் தானுறங்கா) - "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல்" என்று இவள் பிறந்த ஊரிலே உறங்கியறிவாருமில்லையிறே. இப்படியிருக்கிற அவர்களுறங்கிலும் என் கண்கள் உறங்காவென்கிறார்.

விளக்கம் – (நெடுங்கண்கள்) – இப்படிப்பட்ட பிரிவுத் துன்பத்தை உறக்கம் மூலம் மறந்து போக்கலாமே என்றால்; திருவாய்மொழி(2-1-1) - ஆயும் அமர் உலகும் துஞ்சிலும் நீ துஞ்சாயால் – என்னும்படி, தேவர்கள் உள்பட அனைவரும் உறங்கினாலும், எனது கண்கள் உறங்க மறுக்கின்றன. (நெடுங்கண்கள்) – என்னுடைய பெரிய கண்களே எனக்குப் பெரும் சுமையானது. இராமாயணம் ஸு்ந்தரகாண்டம் - அஸிதேக்ஷண – கருத்த கண்கள் கொண்ட சீதை - என்பது போன்று இவள் கண்கள் உள்ளன. (கூறாா்) – திருவாய்மொழி (6-7-2) – ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் - என்று கூறுவதுபோல், இவள் பிறந்த ஊரில் யாருமே உறங்குவதில்லை. அப்படியே அவர்கள் உறங்கினாலும், எனது கண்கள் உறங்குவதில்லை.

(உத்தமன்) – உறக்கமறும்படி தன் தாழ்ச்சியைக் காட்டி அகப்படுத்தின மேன்மையையுடையன். (பேராயினவே பிதற்றுவன்) - இப்படி அபிமதகாலத்தில் உதவாதொழிந்தால் அவனை நினையாதிருக்கவிறே அடுப்பது. அது மாட்டாதே, அவன் திருநாமங்கள் அடைவுகெடச் சொல்லாநிற்பன்.

விளக்கம் - (உத்தமன்) – தன்னுடைய நீர்மைக் குணத்தைக் காட்டி எனது உறக்கத்தைத் தன் வசப்படுத்திய மேன்மை உடையவன். (பேர் ஆயினவே பிதற்றுவாள்) – நாம் விரும்பும் காலத்தில் நமக்கு வந்து அவன் உதவவில்லை என்றால் அவனை நினைக்காமல் இருப்பது அல்லவோ ஏற்றது? அதுவும் இயலவில்லை. அவனுடைய திருநாமங்களை எந்த வரிசையும் அறியாமல் புலம்பியபடி இருப்பேன்.

(பின்னையும்) – அதுக்கு மேலேயும் சில ஹிதஞ்சொல்ல. (காரார் கடல் போலும் காமத்தராயினார் ஆரே பொல்லாமை அறிவார்) - இங்ஙன் சொல்லலாமோ? பத்துமாஸம் ஆறியிருந்திலளோ ஸ்ரீஜநகராஜன் திருமகள்? அப்படியிராவிடில் பொல்லாதாகாதோ? என்னில், பேராழமான கடல்போலே ஆசை கரைபுரண்டு போராநிற்க "பொல்லாங்கு சொல்லுவர்கள்" என்று ஆறியிருக்கப்போமோ? ஆறியிருந்தவர்களுக்கு ஆசை அளவு பட்டதாமித்தனையிறே. ஸ்வரூப ஜ்ஞாநத்தாலே ஆற்றலாமோ அவ்வடிவைக் காண வேணுமென்னும் ஆசை கரைபுரண்டிருப்பார்க்கு? ஸ்வரூபஜ்ஞாநத்தால் ஆற்றினா ருண்டாகில் அவன் ஆசை மட்டமாமித்தனையிறே.

விளக்கம் – (பின்னையும்) - மேலும் சிலர் இவளுக்கு நன்மை தரும் ஆறுதல் வார்த்தைகள் கூறத் தொடங்கினர். (காரார் கடல் போலும் காமத்தராயினார் ஆரே பொல்லாமை அறிவார்) - அவர்கள் இவளிடம், "இப்படி நீ புலம்பலாமா? ஜனகனின் திருமகளான சீதை இராமனை விட்டுப் பத்து மாதம் பிரிந்திருந்தாலும் பொறுமையாக இல்லையா? அது போன்று நீயும் இல்லாவிட்டால், உனது ஸ்வரூபத்தை இழிவாகக் கூற மாட்டார்களா?" என்றனர். அதற்கு இவள் அவர்களிடம் கூறுவது – கடல் போன்று பரந்த ஆசையானது மனதில் கரைபுரண்டு பாயும்போது, "மற்றவர்கள் தவறாகப் பேசுவார்கள்", என்று ஏண்ணுவது இயலுமா? மற்றவர்கள் பொறுத்துக்கொண்டிருந்தால் எனக்கு என்ன? என்னை விட, அவன் மீது அவர்களது ஆசை குறைவு என்றே கூறவேண்டும். அவனது அழகான திருமேனியைக் காண வேண்டும் என்னும் ஆசை கரைபுரண்டு ஓடும்போது,

ஸ்வரூபஞானம் என்னும் தடையால் பொறுக்கமுடியுமா? ஸ்வரூபஞானம் காரணமாக, சீதை போன்றவர்கள் ஆசையைக் கட்டுப்படுத்தினர் என்று கூறினால், அவர்களது ஆசை எனது ஆசையை விடக் குறைவானதே ஆகும் – என்றாள்.

(அது நிற்க) - இது நீ துணிந்தமையித்தனை என்ன வேண்டா. இதுக்கு சிஷ்டாசாரமுண்டு என்கை; பழையருமாய் விலக்ஷணருமாயிருப்பார் அநுஷ்டித்தார்கள் என்கை. (ஆரானும் ஆதானுமல்லள்) - சைதந்யம் குறைந்தவளுமல்லள், அசித்கல்பையுமல்லள். (அவள் காணீர்) - அவளைக் கேளுங்கள். (வாரார் வனமுலை) - தன்னால் தரித்துத் தாங்கவொண்ணாத முலை என்று பருவம் மிக்கிருக்கிறபடி சொல்லுகிறது. காந்தன் தாங்குதல், அது பெறாதபோது வாராலே தரித்தல் செய்யுமித்தனை. (வாசாவத்தையென்று ஆரானுஞ் சொல்லப்படுவாள்) - ப்ரஸித்தையன்றோ? விலக்ஷணரெல்லாம் கொண்டாடப் பட்டவளன்றோ? ஸ்ரீஜனகராஜன் திருமகள் ஓலக்கத்திலும் குறைவற்றாளொருத்தி யென்று கொண்டாடப்பட்டுமவளன்றோ? (அவளும்) - இத்துணிவு துணிந்தேன் நானேயல்லேன், அவளும் துணிந்தாளென்கை. (தன் பேராயமெல்லாமொழிய) - உங்களை இசைவிக்கைக்காக இத்தனை வார்த்தை சென்னேன் நான்; தோழிமாருடைய பெரிய திரளைக் கடுக விட்டு நின்றாளித்தனையன்றோ; நெருப்பில் காலிட வொண்ணாதாற்போலே தோழிமார் திரளில் கால் பொருந்திற்றோ அவளுக்கு? (பெருந்தெருவே) – தோழிமாரை விட்டு ஒரு மூலையிலே இருந்தாளோ? பெருந் தெருவேயன்றோ போனதென்கை. (தாரார் தடந்தோள் தளைக்காலன் பின் போனாள்) - விலங்கிட்டுருக்கிற வத்ஸராயன் பின்னே போகிற இவள், தோளும் தோள் மாலையுங் கண்டு அவனை ஆசைப்பட்டுப் போனாற்போலேயன்றோ போனது. (ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே) - அப்படி அவன் பின்னே போனவளை ஊரார் கொண்டாடின வித்தனையல்லாது பழி சொன்னாருண்டோ?

விளக்கம் – (அது நிற்க) – நான் செய்தது தவறு என்று கூறவேண்டாம். என்னுடைய இந்தச் செயலுக்கு நல்லவர்கள் சிலர் செய்துள்ள செயல்கள் சாட்சிகளாக உள்ளன. மிகவும் சிறந்தவர்கள் கூட, அவன் மீது கொண்ட ஆசைக்காகத் தங்களது பெண்மையை அழித்துக் கொண்டுள்ளனர். (ஆரானும் ஆதானும் அல்லன்) – நான் இப்போது ஒருவளைப் பற்றிக் கூறுகிறேன். அவள் அறிவு குறைந்தவள் அல்ல, அசேதனம் போன்று அறிவு இல்லாதவளும் அல்ல. (அவள் காணீர்) – அவளது ஒழுக்கம் பற்றி நான் கூறுவதைக் கேளுங்கள். (வாரார் வனமுலை) – தன்னால் தாங்கி நிற்க முடியாத ஸ்தனங்கள் என்று கூறும்படி அவள் வயது இருந்தது. அவளுடைய நாயகன் அந்த ஸ்தனங்களைத் தாங்கிப் பித்தபடி இருக்க வேண்டும், இல்லையென்றால் வார் கொண்டு கட்டி வைக்கப்படவேண்டும் என்னும்படியான ஸ்தனங்கள் கொண்டவள். (வாஸவத்தை என்று ஆரானுஞ் சொல்லப்படுவாள்) –

வாஸவதத்தை என்னும் இவள் அனைவராலும் அறியப்படுபவள் அல்லவா? நல்லவர்களால் கொண்டாடப்படுபவள் அல்லவா? ஜனகனின் திருமகளாம் சீதையின் குழுவில் எந்தவிதமான குறைவில்லாதவள் என்று போற்றப்படுபவள் அல்லவா? (அவளும்) – இப்படியாகக் காதலனுக்காக முறை தவறி நடந்தது நான் மட்டும் அல்ல, வாஸவதத்தையும் இவ்விதமே செய்தாள். (தன் பேராயமெல்லாம் ஒழிய) – உங்களது சமாதானத்திற்காகவே நான் இத்தனை சொற்கள் கூறியபடி இருந்தேன். ஆனால் அவளோ தனது காதலனுக்காக தோழிகளின் பெரிய கூட்டத்தையே கைவிட்டாள் அல்லவா? நெருப்பில் கால் வைக்கத் துணியாதவர்கள் போன்று, அவள் தன்னுடைய தோழிகளின் கூட்டத்திற்குள் கால் வைக்கவும் துணியவில்லை. (பெரும் தெருவே) – அவள் தோழிகளை விட்டு ஏதேனும் ஒரு மூலையிலே பதுங்கிக் கிடந்தாளோ? அல்லள், ராஜகுமாரியாக இருந்தும், இந்தச் செயலுக்குப் பின்னரும், கம்பீரமாக ராஜவீதியிலேயே நடந்தாள் அல்லவா? (தாரார் தடந்தோள் தளைக்காலன் பின் போனாள்) – தனது தந்தையான அந்த நாட்டு அரசனால் விலங்கிடப்பட்ட தனது காதலன் வத்சராயன் பின்னே சென்றாள். அவன் மீது மலர்மாலைகள் கிடந்தது என்று எண்ணியா அவன் பின்னே சென்றாள்? அவன் மீது ஆசைப்பட்டு அல்லவா சென்றாள்? (ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே) – இப்படியாகச் சென்ற அவளை அந்த நாட்டு மக்கள் கொண்டாடினர் அல்லாது உங்களைப் போன்று பழித்தா பேசினார்கள்?

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

## திருமாலை

(பகுதி – 5)

2. பச்சை மா மலை போல் மேனிப் பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

பொருள் – திருவரங்கம் என்னும் உயர்ந்த திவ்யதேசத்தில் நித்யமாக வாஸம் செய்யும் பெரியபெருமாளே! பசுமை நிறைந்த மிகப்பெரும் மலை போன்ற திருமேனி, பவளம் போன்று சிவந்த அழகான திருஅதரம், தாமரை மலர் போன்று சிவந்து அழகாக உள்ள திருக்கண்கள் கொண்டவனே! உனது அடியார்களை எப்போதும் நழுவவிடாதவனே! நித்யஸூரிகளின் தலைவனே! ஆயர்களின் கொழுந்தே! இப்படியாக உன்னுடைய திருநாமம் என்னும் மிகவும் இனிதான சுவையை நான் அனுபவித்தபடி இங்கு உள்ளேன். இந்த அனுபவத்தை விட்டு, நீண்ட தூரத்தில் உள்ள பரமபதத்தை ஆள்கின்ற பதவி கிட்டினாலும் நான் அதனை விரும்பமாட்டேன்.

அவதாரிகை – திருநாமத்தினுடைய பாவநத்வமும், அது கற்கையாலே தமக்குப் பிறந்த ராஜகுலமும் சொல்லிற்றுக்கீழ்; இதில், திருநாமத்தினுடைய போக்யதையைச் சொல்லுகிறது. ஆனால் பின்னை, போக்யதையைச் சொல்லி பாவநத்வத்தைச் சொன்னாலோ என்னில் – பயம் போனாலிறே ரஸ்யதையிலே இழிவது. ஜ்வரம் அநுவர்த்தியா நிற்க, பால் ரஸிக்குமோ? முன்பு பாபத்தைக் கூடு பூரித்து யமபீதனாயிருக்கிறவனுக்கு அந்த பயம் நிவ்ருத்தமானாலல்லது போக்யதையிலே நெஞ்சு செல்லாதிறே. யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி ந ஸம்சயம் நர: என்று ருஷிகள் திருநாமம் பயநிவ்ருத்திக்கு ஹேதுவாகச் சொல்லுவார்கள். ஆழ்வார்கள், “பிழைப்பில் பெரும் பெயரே பேசி”, என்று போக்யதா ப்ரகர்ஷத்தைச் சொல்லுவார்கள். இத்திருநாமந்தான் ப்ரயோஜநாந்தரபரர்க்கு ப்ரயோஜநத்தைக் கொடுக்கும், உபாயாந்தர நிஷ்டருக்குப் பாவநமாயிருக்கும்; ப்ரபந்நர்க்கு தேஹயாத்ரா சேஷமாயிருக்கும். முத்துப்படும் துறையில் முழுகுவார் முத்தைக் கொடுத்துப் பழம் கொள்ளுவார்கள். செழுமுத்து

வெண்ணெற்கெனச் சென்று மாறுவார்களிறே. விலையறியும் செட்டிகள் பக்கல் புகுந்தவாறே பெருவிலையனாம்; செருக்கரானார் இத்தைப் பூண்டு அனுபவிப்பார்கள்; அப்படியே ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உறுப்பாய், ஸாதநாந்தர நிஷ்டர்க்கும் உறுப்பாய், ப்ரபந்நர்க்கு ஸ்வயம் ப்ரயோஜநமுமாயாய்த்து இத்திருநாமம் இருப்பது.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், திருநாமத்தின் பாவங்களை நீக்கும் தன்மை, அதன் மூலம் தனக்கு உண்டான ராஜகுலத்திற்கு நிகரானம் மேன்மை ஆகியவற்றைக் கூறினார். இந்தப் பாசுரத்தில், அந்தத் திருநாமத்தில் உள்ள அனுபவிக்கத் தகுந்த தன்மையைக் கூறுகிறார். முதலில் திருநாமத்திற்கு உள்ள இனிமையைக் கூறி, அதன் பின்னர் அதன் பெருமையைக் கூறாமல், ஏன் வரிசை மாற்றிக் கூறினார் என்ற கேள்வி எழலாம். ஜ்வரம் உள்ளபோது, பாலின் சுவையை அறிய இயலாது; அது போன்று, பாவங்கள் பல செய்த காரணத்தினால் மனதில் யம பயம் உண்டாகி, அந்தப் பயம் நீங்காதபோது திருநாமத்தின் இனிமையை அனுபவிக்க இயலாது அல்லவா? விஷ்ணு தர்மம் (43-24) - யந்நாம ஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி ந ஸம்சயம் நர: - யாருடைய திருநாமத்தை ஸங்கீர்த்தனம் செய்தால் மிகவும் பெரிய பயமும் நீங்கப்பெற்று, விடுதலை கிட்டுகிறதோ – என்று கூறுவது போன்று, பல முனிவர்களும் பயத்தை நீக்கும் உபாயமாக திருநாமத்தையே கூறினர். இரண்டாம் திருவந்தாதி (50) - பிழைப்பில் பெரும் பெயரே பேசி – கூறுவது போன்று, ஆழ்வார்களும் திருநாமத்தின் இனிமையைக் கூறினார்கள். இவனது திருநாமம் என்பது மற்ற பயன்களை விரும்புபவர்களுக்கு, அந்தந்தப் பயன்களை அளிக்கும்; எம்பெருமானை விரும்புபவர்களுக்கு, அவனை அடையத் தடையாக உள்ள பாவங்களை நீக்கிவிடும்; அவனையே உபாயம் என்று கொண்டவர்களுக்கு, தங்கள் உடலைத் தாங்கி நிற்கும் உபாயமாக இதுவே இருக்கும். முத்துக் குளிப்பவர்கள் தாங்கள் எடுத்த முத்துக்களைக் கொடுத்து பழம் முதலானவற்றைப் பெறுவார்கள்; பெரியதிருமொழியில் (3-8-7) - செழுமுத்து வெண்ணெற்கெனச் சென்று – என்பது காண்க (இது போன்று திருநாமத்தின் மேன்மை அறியாதவர்கள், அதன் மூலம் அற்பப் பயனை அடையவே எண்ணுவார்கள்). முத்தின் விலையை அறிந்த வியாபாரிகள் அதனை நல்ல விலைக்கு விற்பார்கள் (இது போன்று திருநாமத்தின் மேன்மை அறிந்தவர்கள், அதனைக் கொண்டு மோக்ஷம் பெறுவார்கள்). அரசர்கள் முத்துக்களை மாலையாகக் கோர்த்து அணிவார்கள் (இது போன்று திருநாமத்தின் மூலம் தங்களுக்குப் பயன்படும் செயலைச் செய்தபடி சிலர் இருப்பர்). இது போன்றே திருநாமமும் வேறு பலன்களை எண்ணுபவர்களுக்கு அதனை

அளிப்பதாய், மோக்ஷம் விரும்புபவர்களுக்கு அதனை அளிப்பதாய், ப்ரபன்னர்களுக்கு ஸ்வயம் பலன் அளிப்பதாய் உள்ளது.

கீழே நின்னாமம் கற்ற என்னா நின்றீர். நம் பேர் சொன்னார்க்கு நாம் கொடுக்கக் கடவதொரு நாடுண்டு. அத்தை அவர்களால் கொள்ளொமென்னவொண்ணாது. நம்மால் கொடோமென்னவொண்ணாது. அத்தைக் கொள்ளீர் என்று பெரியபெருமாள் அருளிச்செய்ய. திருநாமம் சொல்லும் போதை ரஸமொழிய அவ்வருகுபோய் அனுபவிக்கும் ரஸம் எனக்கு வேண்டா என்கிறார்.

விளக்கம் – பெரியபெருமாள் ஆழ்வாரிடம், "ஆழ்வாரே! கடந்த பாசுரத்தின் நீவிர் நின்நாமம்கற்ற என்று கூறினீர். என்னுடைய திருநாமத்தைக் கூறியவர்களுக்கு நான் பரமபதம் அளிப்பதே வழக்கமாகும். அவர்களாலும் அதனை வேண்டாம் என்று மறுக்க இயலாது. நானும் அவர்களுக்கு அதனை அளிக்கமாட்டேன் என்று கூற இயலாது. ஆகவே நீவிர் அந்தத் திருநாட்டை ஏற்றுக் கொள்வீராக", என்றான். உடனே ஆழ்வார் பெரியபெருமாளிடம், "திருநாமத்தைக் கூறும்போது உண்டாகும் மிகப்பெரிய சுவையே எனக்கு ஏற்பதாக உள்ளது. பரமபதம் சென்று அனுபவிக்கக் கூடிய சுவை எனக்கு வேண்டாம்", என்றார்.

வ்யாக்யானம் – (பச்சை மாமலை போல் மேனி பவள வாய்க் கமலச்செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும் இச்சுவை) – இந்த ரஸமிருந்தபடி கண்டீர்! உமக்குத்தான் புறம்பே போவென்ன வேண்டியிருந்ததோ? என்கிறார். (பச்சை மாமலை போல் மேனி) – பச்சை நிறத்தையுடைத்தாய், ச்லாக்யமாயிருப்பதொரு மலை போலேயாய்த்துத் திருமேனி இருப்பது. காணப்புக்கால், கண்ணும் குளிர்ந்து நெஞ்சம் குளிரும்படி ச்லாக்யமாயாய்த்திருப்பது. தாபத்ரயாதுரருடைய ஸகல தாபங்களும் கண்டபோதே ஆறும்படியாய்த்துத் திருமேனி இருப்பது. நெய் திணுங்கினாப்போலே அகவாயில் தண்ணளியினுடைய செறிவெல்லாம் வடிவிலே காணலாம்படி இருக்கை. மாமலை என்றது பூஜ்யமான மலை என்றபடி. ப்ரதமத்தில் சுபாச்ரயமாய், பின்பு நித்யாநுபாவ்யமாயிருக்கும் ச்லாக்யதையைச் சொல்லுகிறது. மலையானது ஸ்தைர்யத்துக்கும் ஒப்பாய், வளர்த்திக்கும் ஒப்பாமித்தனையொழியத் திருமேனியிலுண்டான போக்யதாதிசயமெல்லாமில்லையே அதுக்கு.

விளக்கம் - (பச்சை மாமலை போல் மேனி பவள வாய்க் கமலச்செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும் இச்சுவை) – இப்படியாக பல சுவைகள்

உள்ளதைக் கண்டீர்களா? ஏதேனும் சுவை விரும்பி வேறு எங்கும் செல்லவேண்டாம் என்னும்படி. (பச்சை மாமலை போல் மேனி) – பச்சை நிறம் கொண்டதாகவும், சிறந்த மலை போன்று உள்ளதாகவும் இருக்கும் திருமேனி. இதனைக் கண்டால், காண்பவர்கள் கண்களும், நெஞ்சமும் குளிரும்படிச் செய்வதாக உள்ளது. மூன்று விதமான துன்பங்களான ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் போன்ற மூன்றாலும் பாதிக்கப்பட்ட மனிதர்களின் துன்பங்கள் இந்தத் திருமேனியைக் கண்டவுடன் நீங்கும்படி உள்ளது. நெய்யானது உறைந்து நிற்பது போன்று, இவனுடைய உள்ளத்தில் இருக்கும் தயை குணம் என்பது திருமேனியாக உறைந்தது போன்றுள்ள வடிவம். மாமலை என்றால் வணங்கத்தக்க மலை என்பதாகும். முதலில் எளிதாக அண்டும்படியும், பின்னர் நித்யமாக அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் தோற்றுவிக்கும்படியும் உள்ளதாகும். மலை என்பது பெரியதாக உள்ளது போன்று திருமேனி பெரியது என்று திருமேனியின் அளவிற்கு மட்டுமே மலை ஒப்பாகும் அன்றி, இவனது திருமேனியின் இனிமைக்கு மலை ஒப்பாகாது அல்லவா? அதற்காக மேலும் கூறுகிறார்.

(மேனி) – ஆநந்தமய: என்கிற ஸ்வரூபமும் ஆநந்தாதி குணங்களுமல்ல இவரை உகப்பிப்பது; இவை இரண்டும் அகவாயிலே ஆம்படியான இவ்வடிவாய்த்து இவரை உகப்பிப்பது. இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:, குன்றாடு கொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல் நின்றாடு கணமயில்போல் நிறமுடைய நெடுமால் என்னக் கடவதிறே. கழுத்தே கட்டளையாக நீரை முகந்து போகமாட்டாதே மலையினுச்சியிலே சாய்ந்த மேகம் போலவும், கண்ணாலே முகந்து அனுபவிக்கக் குவளைகள் போலவும், அனுபவித்து முடிக்கவொண்ணாமைக்குக் கடல் போலவும், வைத்த கண் வாங்கவொண்ணாமைக்கு மயில்திரள் போலவுமாய்த்து இத்திருமேனி இருப்பது. ஸிஞ்சேதிமஞ்ச ஜநமிந்திரயா தடித்வாந் பூஷாமணித்யுதிபிரிந்த்ரதநுர்த்ததாந: ஸ்ரீரங்கதாமநி தயாரஸநிர்ப்பரத்வாதத்ரௌ சயாளுரிவ சீதள காளமேக:

விளக்கம் – தைத்திரீய ஆனந்தவல்லி – ஆனந்தமய – ஆனந்தத்தையே ஸ்வரூபமாக உடையவன் – என்று கூறுவது போன்று இவனது ஸ்வரூபமோ, அல்லது இவனது குணங்களோ ஆழ்வாருக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்படுத்துபவை அல்ல; இந்த இரண்டையும் (ஸ்வரூபம், குணங்கள்) உட்கொண்ட இவனது அழகான திருமேனியே இவருக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. விஷ்ணு புராணம் (6-5-84) - இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ: - தனது விருப்பம் காரணமாகவே பலவிதமான திருமேனிகளை எடுத்துக் கொள்பவன்; பெரியாழ்வார் திருமொழி (4-8-9) -

குன்றாடு கொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல் நின்றாடு கணமயில்போல் நிறமுடைய நெடுமால் – போன்ற வரிகளில் இவனது திருமேனியில் பலரும் ஈடுபட்டது தெளிவாகிறது. இவனது திருமேனி எப்படி உள்ளது என்றால் – கழுத்து முட்டமுட்ட நீரை உண்ட மேகமானது நகர இயலாமல் மலை உச்சியில் இளைப்பாறுவது போன்றும், கண்ணால் கண்டு அனுபவிக்கக்கூடிய குவளைகள் போன்றும், எத்தனை இரசித்தாலும் இரசித்து முடிக்க இயலாத கடல் போன்றும், வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்து இரசிக்கக்கூடிய மயில் கூட்டம் போன்றும் – உள்ளது. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் (1-82) - ஸிஞ்சேதிமஞ்ச ஜநமிந்திரயா தடித்வாந் பூஷாமணித்யுதிபிரிந்த்ரதநுர்ததாந: ஸ்ரீரங்கதாமநி தயாரஸநிர்ப்பரத்வாதத்ரௌ சயாளுரிவ சீதள காளமேக: - ஸ்ரீரங்கநாச்சியார் என்னும் மின்னலைக் கொண்டுள்ளது, தன்னுடைய திருவாபரணங்களில் உள்ள இரத்தினக் கற்களின் மூலம் வெளிப்படும் ஒளிக்கதிர்களை இந்த்ரவில் போன்று உடையது, க்ருபை என்னும் நீர் நிரம்பியதாக உள்ளது, திருவரங்கம் என்னும் மலை மீது இளைப்பாறிக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட மழைக்கால மேகமான பெரியபெருமாள் என் மீதும் தனது க்ருபை என்னும் நீரைப் பொழிவானாக – என்றது காண்க.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

# திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

திருக்கச்சி நம்பிகளின் திருநக்ஷத்ரம் மாசி மாதம் ம்ருகசீர்ஷம் (16.02.2008) ஆகும். அதற்கான சிறப்புப் பகுதியாக பெரியதிருமுடியடைவு என்னும் நூலில் இருந்து திருக்கச்சி நம்பிகள் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன.

## கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

சபர்யம்சபூதரான திருக்கச்சி நம்பிக்குத் திருவவதார ஸ்தலம் தொண்டை மண்டலத்தில் பெருமாள் கோயிலுக்குப் பூர்வபாகத்திலே தர்மபுரி என்னும் பூவிருந்தவல்லி. திருநக்ஷத்ரம் சோபக்ருத் வருஷம் மாசி மாஸத்தில் மிருகசீர்ஷம். திருவவதாரம் சதுர்த்த வர்ணத்தில். திருநாமங்கள் திருக்கச்சி நம்பி, ஸ்ரீகாஞ்சீபூர்ணர். இருப்பிடம் பெருமாள்கோயில். திருவாராதனம் பேரருளாளப் பெருமாள். ஆசார்யர் மஹாபூர்ணர். கைங்கர்யம் தேவப்பெருமாளுக்குத் திருவாலவட்டம் ஸமர்ப்பிக்கிறது. இவர் செய்தருளின க்ரந்தம் வரதராஜாஷ்டகம். தேவப்பெருமாளுக்கு அத்யந்தம் அந்தரங்கர். ஸ்ரீபாஷ்யகாரருக்கு ஹிதப்ரவர்த்தகர்.

## தனியன்

தேவராஜ தயாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீபூர்ணம் உத்தமம்
ராமானுஜமுநேர் மாநயம் வந்தேஹம் ஸஜ்ஜநாச்ரயம்

பொருள் – வரதப்பெருமாளின் கருணைக்கு இருப்பிடமாக உள்ளவர், மிகவும் சிறந்தவர், ராமானுஜரால் மதிக்கப்பட்டவர், நல்லவர்கள் சென்று அடையும் இடமாக உள்ளவர் – இப்படிப்பட்ட திருக்கச்சி நம்பிகளை நான் அண்டுகிறேன்.